www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## வரலாறு

நேரம் : 3.00 மணி  மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.  20 x 1 = 20

1. வரலாற்றின் பழமையான காலம் _______ ஆகும்.
   அ) பழங் கற்காலம்  ஆ) புதிய கற்காலம்
   இ) செம்புக் காலம்  ஈ) இரும்புக் காலம்

2. கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   அ) குரு-பாஞ்சாலம்  ஆ) கங்கைச் சமவெளி
   இ) சிந்துவெளி  ஈ) விதேகா

3. புத்தர் தனது முதல் போதனையை _______ இல் நிகழ்த்தினார்.
   அ) சாஞ்சி  ஆ) வாரணாசி  இ) சாரநாத்  ஈ) லும்பினி

4. _______ நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.
   அ) அர்த்தசாஸ்திரம்  ஆ) இண்டிகா
   இ) இராஜதரங்கிணி  ஈ) முத்ராராட்சசம்

5. _______ ராஜசூய யாகத்தை நடத்தினார்.
   அ) பெருநற்கிள்ளி  ஆ) முதுகுடுமிப் பெருவழுதி
   இ) சிமுகா  ஈ) அதியமான்

6. இந்தோ - கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர் _______.
   அ) யூதிடெமஸ்  ஆ) டெமெட்ரியஸ்
   இ) மினாண்டர்  ஈ) ஆன்டியால்ஸைடஸ்

7. குப்தர் காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளில் எது நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
   அ) இலக்கியச் சான்றுகள்  ஆ) கல்வெட்டுச் சான்றுகள்
   இ) நாணயச் சான்றுகள்  ஈ) கதைகள், புராணங்கள்

8. _______ என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.
   அ) குந்தலா  ஆ) பானு  இ) அவந்தி  ஈ) சர்வாகதா

9. காம்போஜம் என்பது நவீன _______.
   அ) அஸ்லாம்  ஆ) சுமத்ரா  இ) ஆனம்  ஈ) கம்போடியா

10. உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோவிலைக் கட்டியவர்கள் _______.
    அ) ராஷ்டிரகூடர்  ஆ) டோமர்  இ) சண்டேளர்  ஈ) பரமர்

11. _______ ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்
    அ) 28 கி.கி  ஆ) 27 கி.கி  இ) 32 கி.கி  ஈ) 72 கி.கி

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12. *பொருத்துக.*

i) அப்துர் ரசாக் - 1. ரஷ்யா

ii) நிகிடின் - 2. சாளுவ நாயக்கர்

iii) டோமிங்கோ பயஸ் மற்றும் நூனிஸ் - 3. பாரசீகம்

iv) செல்லப்பா - 4. போர்த்துகல்

அ) 1, 2, 3, 4 ஆ) 4, 3,2,1 இ) 2,1,4, 3 ஆ) 3, 1, 4, 2

13. கூற்று: மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.

காரணம் : அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்.

அ) கூற்று சரி ; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று தவறு ; காரணம் தவறு.

இ) கூற்று சரி ; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்று தவறு ; காரணம் சரி.

14. கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் அரசர் _______ ஆவார்.

அ) அக்பர் ஆ) ஷாஜகான் இ) ஷெர்ஷா ஈ) பாபர்

15. பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.

i) ராணா சங்காவின் மூர்க்கமான வலிமை வாய்ந்த படைகள் பாபரின் சக்திவாய்ந்த படையை எதிர்கொண்டது.

ii) கன்னோசிப் போருக்குப்பின் அக்பர் நாடு இல்லாத ஒரு இளவரசர் ஆனார்.

அ) (i) சரி ஆ) (ii) சரி

இ) (i) மற்றும் (ii) தவறு ஈ) (i) மற்றும் (ii) சரியானவை

16. சிவாஜியின் இராணுவ அமைப்பில் மிகச்சிறிய படை அலகின் தலைவராக _______ இருந்தார்.

அ) நாயக் ஆ) ஹவில்தார்

இ) பர்கிர் ஈ) ஷைலேதார்

17. வந்தவாசிப் போர் _______ க்கிடையே நடைபெற்றது.

அ) அயர்கூட் மற்றும் லாலி ஆ) ராபர்ட் கிளைவ் மற்றும் லாலி

இ) அயர்கூட் மற்றும் புஸ்ஸி ஈ) ராபர்ட் கிளைவ் மற்றும் புஸ்ஸி

18. சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு _______.

அ) 1837 ஆ) 1861 இ) 1844 ஈ) 1857

19. பாளையக்காரர் முறை முதன்முதலில் _______ பேரரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அ) விஜயநகர் ஆ) பாமனி இ) காகதிய ஈ) ஹொய்சள

20. தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளராகத் திகழ்ந்தவர் _______ ஆவார்.

அ) இராமலிங்க அடிகளார் ஆ) காசி விசுவநாத முதலியார்

இ) அயோத்திதாச பண்டிதர் ஈ) தேவேந்திரநாத் தாகூர்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கூறுக.
22. தொடக்க வேதகாலத்தில் பெண்களின் நிலையைக் கோடிட்டுக் காட்டுக.
23. ஒரு மையப்படுத்தப்பட்ட அரசின் முக்கிய அம்சங்கள் யாவை?
24. "யவன" என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
25. தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக.
26. நிலத்தைக் கணக்கிடுவதற்கான வெவ்வேறு அலகுகளைக் கூறுக.
27. இராமானந்தரின் போதனைகள் யாவை?
28. புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?
29. சமூக சீர்திருத்தத்திற்கு இராஜா ராம்மோகன் ராயின் பங்களிப்புகள் யாவை?
30. இந்தியாவில் ஆங்கிலேயக் குடியேற்றங்களைப் பட்டியலிடுக.

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. ஹரப்பா மக்களின் "நம்பிக்கைகள்" குறித்து நீங்கள் அறிந்தது என்ன?
32. இரண்டாம் நகர மயமாக்கத்துக்குப் பிறகு, வளர்ச்சி பெற்ற நகரங்கள் பற்றி எழுதுக.
33. சோழ அரசர்களில் தலை சிறந்தவன் கரிகாலன்.
34. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகளைக் கூறுக.
35. புகழ் பெற்ற சைவ மூவர்கள்
36. மாலிக் காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.
37. கோல்கொண்டா கோட்டை எங்கே கட்டப்பட்டது? அதன் அமைப்பை விவரி.
38. அக்பரது மன்சப்தாரி முறை.
39. 1806 ஆண்டு வேலூர் புரட்சி பற்றி எழுதுக.
40. கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் பற்றி குறிப்பிடுக.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது?

*(அல்லது)*

ஆ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.

42. அ) மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளைப் பற்றி விளக்கவும்.

*(அல்லது)*

ஆ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43. அ) குப்தர் காலத்து வணிகக் குழுக்களின் பங்கை ஆய்வு செய்க.

*(அல்லது)*

ஆ) வட இந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துகள் யாவை?

44. அ) அலா-உத்-தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை விவாதிக்கவும்.

*(அல்லது)*

ஆ) சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக.

45. அ) முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு பற்றிக் குறிப்பு வரைக.

*(அல்லது)*

ஆ) சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழிவகுத்தது?

46. அ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப் படைத் திட்டத்தினைப் பற்றி விவரி.

*(அல்லது)*

ஆ) ***கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.***

1. சூரத்
2. கோவா
3. பாண்டிச்சேரி
4. பழவேற்காடு
5. கல்கத்தா

47. அ) தமிழ்நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக்காட்டுக.

*(அல்லது)*

ஆ) அக்பரது ஆட்சிக் காலத்தில் நடந்த ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை ***காலக்கோட்டில்*** வரைக.

*******

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com